# அரசினர் பொறியியல் கல்லூரி, சேலம் - 636 011.
## கல்வி உதவித்தொகை பிரிவு
## கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க மாணவ / மாணவிகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டிய ஆவணங்கள் பற்றிய விவரங்கள்.

1. மாணவ / மாணவிகள் தங்கள் ஆதார் அட்டையில் தங்களுடைய பெயர், பிறந்த தேதி மற்றும் பாலினம் (ஆண் / பெண்) ஆகியவை 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் உள்ளவாறு சரியாக உள்ளதா என்று சரிபார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாமல் தவறுதலாக இருப்பின் அவற்றை தங்களுடைய 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் உள்ளவாறு தங்கள் Aadhar Card - இல் திருத்தம் செய்து கொள்ள வேண்டும்.
2. தங்களுடைய ஆதார் எண்ணுடன் தங்கள் Mobile Number கட்டாயம் இணைத்து இருக்க வேண்டும்.
3. இதுவரை தங்களுடைய Aadhar Card - இல் Biometric Updating செய்யாதவர்கள், அதாவது தங்கள் புகைப்படம், கண்விழிகள் மற்றும் கைரேகை போன்ற Biometric Updating செய்யப்பட வேண்டும்.
4. புகைப்படத்துடன் கூடிய E-Community Certificate கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்.
5. மத்திய அரசின் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கும் மாணவ / மாணவிகள் கட்டாயம் (Valid E-OBC Certificate) பெற்றிருக்க வேண்டும். (SC/ST மாணவ / மாணவிகளை தவிர்த்து).
6. தகுதியான வருமானச் சான்று (Valid E-Income Certificate) பெற்றிருக்க வேண்டும்.
7. தகுதியான முதல் பட்டதாரி சான்று (E-First Graduate Certificate) பெற்றிருக்க வேண்டும்.
8. இருப்பிடச் சான்று (E-Nativity Certificate) பெற்றிருக்க வேண்டும்.
9. தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் மட்டுமே வங்கி கணக்கு துவங்கப்பட வேண்டும். (Nationalized Banks Only).
10. மாணவ / மாணவிகளின் பெயரில் தனியாக வங்கி கணக்கு பராமரிக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் Joint Account ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(P.T.O)

11. தங்களுடைய வங்கி கணக்கு எண்ணுடன் தங்கள் ஆதார் எண் கட்டாயம் **seeding** செய்யப்பட்டிருக்க வேண்டும்.
12. முன்னர் பயின்ற கல்வி நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட வருகை பதிவு அசல் சான்று (Attendance Certificate Original) கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.
13. மாணவ / மாணவிகள் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு தங்களது அசல் கல்வி சான்றிதழ்களை நகல்களாகவும் மற்றும் SCAN செய்து PDF Format-இல் வைத்திருக்க வேண்டும்.
14. இக்கல்லூரியில் சேர்க்கை பெற்ற பிறகு கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க UMIS Id No கட்டாயம் என்பதால், இக்கல்லூரியின் UMIS Nodal Officer-ஐ தொடர்பு கொண்டு தங்களுடைய விவரங்களை வழங்கி தங்களுக்கான UMIS Id No-ஐ பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.
15. தகுதியுள்ள மாணவ / மாணவிகள் அனைவரும் கட்டாயமாக தங்களுக்கு தகுதியுள்ள கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க வேண்டும் என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**குறிப்பு:**

**மேற்கண்ட பணிகளை கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கும் முன் செய்து முடிக்க வேண்டுமென இதன் மூலம் கட்டாயம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்படி பணிகளை செய்து முடிக்காத மாணவ / மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க இயலாத நிலை ஏற்படும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

**மேலும் மேற்படி பணிகளை செய்து முடிக்காத நிலையில் உள்ள மாணவ / மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை பெற்று வழங்க இயலாத நிலை ஏற்படும் பட்சத்தில், அதற்கு இக்கல்லூரி முதல்வரோ / நிர்வாகமோ எந்த வகையிலும் பொறுப்பு ஏற்க இயலாது எனவும், அதற்கான முழு பொறுப்பும் சம்பந்தப்பட்ட மாணவ / மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்களையே சாரும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

**எனவே மாணவ / மாணவிகள் மேற்படி பணிகளை விரைவாக செய்து முடித்து அவரவர்களுக்கு தகுதியான கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பித்து பயன்பெறுமாறு இதன் மூலம் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

- For more details please visit our college Website: gcesalem.edu.in

**நன்றி.**